†
JMJ

VERITAS



பாத்திமா-நூறு
1917-2017



இன்றைய அர்ச்சிஷ்டவர் திருநாள்

பிப்ரவரி 01ம் தேதி

அப்போஸ்தலரான அர்ச்.அருளப்பரின் சீடரும், மேற்றிராணியாரும் வேதசாட்சியுமான அர்ச்.அந்தியோக்கு இஞ்ஞாசியார் திருநாள்

அந்தியோக்கு மேற்றிராணியாரான அர்ச்.இஞ்ஞாசியார் தான், முதன் முதலாக அகில உலக திருச்சபையை, கத்தோலிக்க திருச்சபை என்று அழைத்தார்.

அர்ச்.இராயப்பர், எவோடியஸுக்கு அடுக்ததாக,அர்ச்.இஞ்ஞாசியாரை அந்தியோக்கு நகரின் மூன்றாவது மேற்றிராணியாராக, நியமித்தார்; உரோமாபுரிக்கு தனது தலைமையகத்தை மாற்றுவகற்கு முன்னதாக, அர்ச்.இராயப்பர், அந்தியோக்கு நகரின் முதல் மேற்றிராணியாராக இருந்தார்.

இவருடைய காலத்தில், உரோமையை ஆண்ட டிராஜன் என்கிற சக்கரவர்த்தி, அந்தியோக்கு நகரத்திற்கு வந்தபோது,அங்கிருந்த கிறீஸ்துவர்கள் எல்லோரும், அஞ்ஞான அயலார்களுடன் சேர்ந்து, ஒன்றுபட்டு, அஞ்ஞான விக்கிரகங்களுக்கு வழிபாடு செய்ய வேண்டும், என்று கட்டளையிட்டான். இவ்விதம் விக்கிரகங்களை வழிபட்டு, பலி செலுத்தாத கிறீஸ்துவர்களைக் கொன்று போடும்படி உத்தரவிட்டான்.

அர்ச். இஞ்ஞாசியார் விரைவிலேயே கைது செய்யப்பட்டு, டிராஜன் முன்பாக நிறுத்தப்பட்டார். சக்கரவர்த்தியினாலேயே குற்றம் சுமத்தப்பட்டவராக, சங்கிலிகளால் கட்டுண்டவராக, உரோமாபுரி

நகரத்திற்கு அர்ச்.இஞ்ஞாசியார் இழுத்துச் செல்லப்பட்டார். அங்கு உரோமாபுரி மக்களுக்கு முன்பாக காட்டுமிருகங்களுக்கு இரையாகப் போடுவதற்காக, அர்ச். இஞ்ஞாசியாரைக் கொண்டு சென்றனர்.

அர்ச். இஞ்ஞாசியார், உரோமாபுரிக்குப்பபயணமாகக் கொண்டு செல்லப்பட்டபோது, ஏழு கடிதங்கள் எழுதினார்; அவை எல்லாம் மிகவும் பிரசத்திபெற்றவையாக திருச்சபையால் பாதுகாக்கப்பட்டி ருக்கின்றன : அவற்றில் ஐந்து கடிதங்கள், துருக்கியிலுள்ள ஆசியா விலுள்ள கிறீஸ்துவர்களுக்கு எழுதப்பட்டன . சர்வேசுரனுக்கும்,திருச் சபை அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து, வேத விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும்! என்று அறிவுறுத்தும்படியாக எழுதியிருந்தார்; அக் கடிதங்களில், பதிதத் தப்பறைகள் மட்டில் விழிப்புடனும் எச்சரிக்கை யுடனும் இருக்க வேண்டும்! என்று கிறீஸ்துவர்களுக்கு அறிவுறுத்துகின் றார்; மேலும், கத்தோலிக்க வேத சத்தியங்கள் எவை என்பதையும் அவற்றில், எழுதியிருந்தார். 6வது கடிதம், ஸ்மிர்னா நகர மேற்றிராணி யாரான அர்ச்.போலிக்கார்ப்புவிற்கு எழுதியிருந்தார். இவர் பின்னாளில், வேதசாட்சியாகக் கொல்லப்பட்டார். உரோமையிலிருந்த கிறீஸ் துவர்களுக்கு இவர், ஏழாவது கடிதத்தை எழுதினார்: அக்கடிதத்தின் ஒரு சிறுபகுதி: “துன்புறுகிற என் சர்வேசுரனை கண்டு பாவிக்கும்படியாக என்னை அனுமதியும். நான் கிறீஸ்துநாதரின் மிகக் தூய்மையான அப்பமாக மாறும்படியாக, சர்வேசுரனின் கோதுமை மணியாயிருக்கிற நான் சிங்கங்களின் பற்களால் நன்றாக அரைக்கப் படவேண்டியிருக்கிறது!” (இது, இவருடைய திருநாள் திவ்ய பலிபூசை யின்போது,ஜெபிக்கப்படுகிற ஜெபமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது).

கி.பி.107ம் வருடம், கொலோசிய மைதானத்தில் இரண்டு சிங்கங் களுக்கு , இவர் தன்னையே இரையாகக் கையளித்து மகிமைமிக்க வேத சாட்சிய முடியைப் பெற்றுக்கொண்டார்.

அர்ச்.அந்தியோக்கு இஞ்ஞாசியாரே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்! **அர்ச். அமலோற்பவ மாமரியே! வாழ்க!**